ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2229/3 - 2021 මැයි මස 24 වැනි සඳුදා - 2021.05.24

*2229/3 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு மே மாதம் 24 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### *2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டம்*

*3 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவின் கீழான கட்டளை*

திருத்தப்பட்டவாறான 2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, முதலீட்டு ஊக்குவிப்பு என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சராகவிருக்கும் நிதி அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான், எவிக் இன்டர்நெஷனல் ஹொட்டேல்ஸ் லங்கா லிமிட்டெட் தொடர்பில் 2017, திசெம்பர் 29 ஆந் திகதிய 2051/38 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 3 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவின் கீழான அடுத்துப்பின்னரான கட்டளையினால் திருத்தப்பட்டவாறான, 2014, யூன் 16 ஆந் திகதிய 1867/5 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 3 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவின் கீழான கட்டளைக்கு மேலதிகமாக, இக்கட்டளை மூலம் பின்வருமாறு வெளிப்படுத்துகின்றேன்:-

> *2017, திசெம்பர் 29 ஆந் திகதிய 2051/38 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 3 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவின் கீழான அடுத்துப்பின்னரான கட்டளையினால் திருத்தப்பட்டவாறான 2014, யூன் 16 ஆந் திகதிய 1867/5 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளையின் (4) ஆம் வாசகமானது, கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு வழங்கப்பட்ட காலப்பகுதியை 2020, மாச்சு 25 ஆந் திகதியிலிருந்து பத்தொன்பது (19) மாதங்களைக் கொண்டவொரு மேலதிக காலப்பகுதிக்கு நீடிப்பதற்கென, பின்வருமாறு வாசிக்கப்படும் வகையில் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது :-*
>
> *"(4) மேற்கூறப்பட்ட, "மேல் மாகாணத்தில் கொழும்பு 03, ஆர். ஏ. டி. மெல் மாவத்தை, 418 ஆம் , 420 ஆம் மற்றும் 422 ஆம் இலக்கங்களில் தொடர்மாடி பல்கூட்டுத் தொகுதிகளைக் கொண்ட கலப்பு அபிவிருத்திக் கருத்திட்டமொன்றை மேற்கொள்வதற்கான கருத்திட்டம்" நிர்மாணத்துடன் தொடர்புடைய பொருட்களுக்கான தீர்வையற்ற வசதியை நீடிக்காமல், 2021, ஒற்றோபர் 24 ஆந் திகதியில் வர்த்தகத் தொழிற்பாட்டைத் தொடங்குதல் வேண்டும்."*

**மஹிந்த ராஜபக்ஷ** (பா.உ.),
நிதி அமைச்சர்.

கொழும்பு,
*2021, மே 24.*

*06-195*

1A - PG 5448 — 545 (2021/05) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*